அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:62/2016
தேதி : 31/03/2016

# கொல்கத்தா பாலம் இடிந்து விபத்து
# சமக நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
# அனுதாபச் செய்தி

கொல்கத்தாவின் வடக்கு பகுதியில் கிரிஸ் பார்க் என்ற இடத்தில் புதிய பால கட்டுமானப் பணியின் போது பாலம் இடிந்து விழுந்து ஏற்பட்ட விபத்தில் பல பேர் பலியானதோடு நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்த சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. போக்குவரத்து நெரிசல் நிறைந்த அப்பகுதியில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தால் இத்தகைய அசம்பாவிதம் நிகழாமல் தடுத்திருக்கலாம். துரதிருஷ்டவசமான இவ்விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய என் பிரார்த்தனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கு வங்க அரசு இவ்விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கும், காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கும் தகுந்த இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்